ஆனால், என்னுடைய பரமக்குடி சட்டமன்றத் தொகுதியிலே பரமக்குடி நகரம், போகலூர் ஒன்றியத்தில் சத்திரக்குடி ஆகிய இந்த இரண்டு கிராமங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் போகலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு, வரக்கூடிய மானியக் கோரிக்கையில் அறிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியிலே மதுரையிலிருந்து இராமேஸ்வரம் நான்கு வழிச் சாலைப் பணிகள் வேகமாக நடைபெறத் தொடங்கப்படவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கூட்டுறவுத் துறையில் 210 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கவேண்டுமென்று தமிழக அரசை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அருமையான வாய்ப்பினைத் தந்த தங்களுக்கும், எங்களுடைய கட்சித் தலைவர் நைனா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 23-2-2009 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

46. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்தச்) சட்டம் 18-6-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என அறிவித்தது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறையின் 18-6-2008 ஆம் நாளிட்ட 100 ஆம் எண் அரசாணையில்

2009 பிப்ரவரி 20]

வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

47. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காவது திருத்தச்) சட்டம் 18-6-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என அறிவித்தது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.I) துறையின் 18-6-2008 ஆம் நாளிட்ட 101 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

48. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாவது திருத்தச்) சட்டம் 18-6-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என அறிவித்தது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.I) துறையின் 18-6-2008 ஆம் நாளிட்ட 102 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

49. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாவது திருத்தச்) சட்டம் 18-6-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என அறிவித்தது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.I) துறையின் 18-6-2008 ஆம் நாளிட்ட 103 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

50. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாவது திருத்தச்) சட்டம் 18-6-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என அறிவித்தது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.I) துறையின் 18-6-2008 ஆம் நாளிட்ட 104 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

[2009 பிப்ரவரி 20

51. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான முறைகளும் நிபந்தனைகளும்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.I) துறையின் 4-8-2008 ஆம் நாளிட்ட 132 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 262 (3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

- ஏதுமில்லை -

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS